STC.No. 16/2025
நாள் 10.11.2025.
P.W.1 – (திணேஷ்குமார் )
எதிரி ஆஜரில்லை. இணையவழி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.
எதிரி தரப்பில் **குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நானும் எதிரியும் 2 ஆண்டுகளாக ரியல் எஸ்டேட் தொழில் செய்வதாக சொல்லியுள்ளேன் என்றால் சரி. அதற்கான எந்தவித ஆவணத்தையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. நானும் எதிரியும் உண்மையில் ரியல் எஸ்டேட் தொழில் செய்திருந்தால் அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. 2 ஆண்டுகளுக்கு முன்பு எதிரியின் பினாமி ஆகிய அவர் உறவினர் இடத்தை எனக்கு எழுதிக் கொடுத்திருந்தார் அந்த உறவினர் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த ஆவணம் என்னிடம் உள்ளது. அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன் என்றால் ஆம். என் உடன் பிறந்த சகோதரர் பெயர் மாரிச்சாமி. எனக்கும் மாரிச்சாமிக்கும் எந்த கருத்துவேறுபாடும் இல்லை. இந்த வழக்கு சம்மந்தமான விபரங்கள் மாரிச்சாமிக்கும் தெரியும் என்றால் ஆம். வழக்கில் தாக்கல் செய்த பின்பு எதிரிக்கு எதிராக மாரிச்சாமி ஒரு காசோலை வசூலுக்கு தாக்கல் செய்து ஒரு சட்ட அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் சரி. நான் என் தாயார் மாரியம்மாளுக்கு உண்டான இடத்தை அடமானம் வைத்து ரூ.50,00,000/- வைத்திருந்ததாக சொல்வதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆம். தாக்கல் செய்ய உள்ளேன். என் தகப்பனார் ரூ.25 லட்சம் கடன் வாங்கி வைத்திருந்ததாக சொல்வதற்கும் நான் ஆவணம் தாக்கல் செய்ய வில்லை என்றால் ஆம். அதனையும் தாக்கல் செய்ய உள்ளேன். என் நகைகளை ஸ்ரீவில்லிபுத்தூர் தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கியில் அடமானம் வைத்து ரூ.10 லட்சம் வைத்திருந்ததாக சொல்வதற்கும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆம். அதனையும் தாக்கல் செய்ய உள்ளேன்.

நான் உறவினர்கள் மற்றும் நண்பர்களிடம் கடன் வாங்கி வைத்திருந்ததாக சொல்வதற்கு விபரங்கள் மற்றும் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆம். அதனையும் தாக்கல் செய்ய உள்ளேன். நான் சொல்வது போல் எந்த ஒரு ஆவணமும் இல்லாததால்தான் நான் வழக்குடன் தாக்கல் செய்யவில்லை என்றாலும் தற்போது தாக்கல் செய்ய இருப்பதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் HDFC Insurance நிறுவனத்தில் வேலை செய்கிறேன் என்றால் சரி. எனக்கு வங்கி நடைமுறை தெரியும் என்றால் ஆம். ரூ.20,000/-ற்கு மேல் ரொக்க பரிவர்த்தனை செய்ய கூடாது என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் ஆம். என் அப்பா வங்கியில் கடன் வாங்கியதாக சொல்வது வங்கி கணக்கில் வரவு வைத்திருப்பார்கள் என்றால் ஆம். அதேபோல் என் தாயார் பெற்றதாக சொல்லும் கடன் மற்றும் பிற நபர்களிடம் வாங்கியதாக சொல்லும் கடன் அனைத்தும் வங்கி மூலமாக வரவு வைக்கப்பட்டிருக்கும் என்றால் சரி. எதிரியின் குடும்ப விபரங்கள் எனக்கு முழுமையாக தெரியாது என்றால் சரி. நான் இதற்கு முன் வேறு யாருக்கும் கடன் கொடுக்கவில்லை என்றால் சரி. எதிரியுடன் என் தகப்பனார் ரியல் எஸ்டேட் தொழில் செய்தார் என்றால் ஆம். என் தகப்பனார் அரசு ஊழியர் என்பதால் என் அம்மா பெயரில் இடம் வாங்க விற்க மற்றும் விற்பனை ஒப்பந்தங்கள் ஏற்படுத்துவார் என்றால் சரி. என் அப்பா என் பெயரிலும் இடம்

வாங்குவார் என்றால் சரி. என் அண்ணன் பெயரிலும் என் அப்பா இடம் வாங்குவார் என்றால் சரியல்ல. இதுவரை என் அண்ணன் பெயரில் என் அப்பா இடம் வாங்கவில்லை. என் தாயாரின் கையொப்பம் குறித்து என் தாயாரை விசாரித்தால் தெரியவரும் என்றால் ஆம். என் தாயார் மாரியம்மாளுக்கும் எதிரிக்கும் இடையே 18.06.2021 அன்று உறுதி மொழி பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் கடன் வாங்கிய தேதியிலேயே வழக்கு காசோலை கொடுத்ததாக நான் சொல்லியுள்ளேன் என்றால் ஆம். நான் பணத்தை ரொக்கமாக கொடுத்தேன். என் வீட்டில் வைத்துக் கொடுத்தேன். அப்போது என் வீட்டில் நான், என் அப்பா, என் அம்மா ஆகியோர் இருந்தோம். வழக்கு காசோலை தவிர வேறு ஒப்பந்தமோ ஆவணமோ எதிரியிடம் எழுதி வாங்கினேனா என்றால் இல்லை. நாராயணசாமி என்பவர் யார் என்றால் அவர் ஒரு தரகர். நாராயணசாமி பெயருக்கு என் தாயார் ஒரு ஆவணத்தை எழுதிக் கொடுத்திருந்தார் என்றால் எனக்கு தெரியவில்லை. எதிரியை என் தகப்பனாருக்கு நாராயணசாமி அறிமுகப்படுத்தி வைத்தார் என்றால் சரியல்ல.

நான் எதிரியுடன் வியாபாரம் செய்வதாக சொல்வது, கடன் கொடுத்ததாக சொல்வது அனைத்தும் நாராயணசாமிக்கு தெரியுமா என்றால் தெரியாது. 18.06.2021 அன்று ஏற்படுத்தப்பட்ட உறுதி மொழி பத்திரத்தின் அடிப்படையில் எதிரியால் என் தாயாருக்கு கொடுக்கப்பட்டிருந்தது என்றால் சரியல்ல. வழக்கு காசோலையை நான் என் தாயாரிடம் இருந்து வாங்கி நிரப்பப்படாமல் இருந்த காசோலையை நிரப்பி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பு.சா.ஆ.4 பதில் அறிவிப்பில் 18.06.2021 உறுதி மொழி பத்திரத்தின் படி வழக்கு காசோலை வழங்கப்பட்டிருந்ததாகவும் அது எற்கனவே என் தாயார் கட்டுப்பாட்டில் இருந்தது என குறிப்பிட்டு சொல்லியிருந்தார் என்றால் அவ்வாறு சொல்லியிருந்தார், ஆனால் அது தவறு. பு.சா.ஆ.3 அறிவிப்பு கொடுத்தபின் எதிரி என் மீதும் என் பெற்றோர் மீதும் திருத்தங்கல் காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார் என்றால் ஆம். அந்த காவல் நிலைய புகார் விசாரணைக்கு என் தகப்பனார் சென்றிருந்தார் என்றால் ஆம். நான் காவல் நிலைய விசாரணைக்கு செல்லவில்லை. அந்த காவல் நிலைய புகார் விசாரணை இன்னும் நிலுவையில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. ஏற்கனவே பெற்றிருந்த காசோலையை வைத்து எதிரியிடம் பணம் பறிக்க முயற்சிப்பதாக எதிரி என் மீதும் என் பெற்றோர் மீதும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தால் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. என் பெற்றோருடன் காவல் நிலைய விசாரணைக்கு நாராயணசாமி சென்றிருந்தாரா என்ற விபரம் எனக்கு தெரியாது.

நான் கடன் கொடுத்த சமயத்தில் என்னிடம் ரூ.1,05,00,000/- ரொக்கமாக இருந்ததாக சொல்வதற்கு நான் ஆவணம் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. என்னிடம் பணம் ரொக்கமாக இருந்தது. நான் சொல்வதுபோல் அந்த பெரிய தொகையை கொடுக்க எனக்கு அறுகதை இல்லை என்றால் சரி. ஏற்கனவே எதிரியின் காசோலையை என் தாயாரிடம் இருந்ததாக தரகர் நாராயணசாமியின் மூலமாக எதிரியிடம் பணம் பறிக்கும் எண்ணத்தில் இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் எந்த காலகட்டத்திலும் ரியல் எஸ்டேட் தொழில் செய்யவில்லை என்றாலும் என் அப்பா மற்றும் என் அம்மாவிடம் தான் ரியல் எஸ்டேட் தொழில் செய்தார் என்றாலும் சரியல்ல. என்னுடன் ரியல் எஸ்டேட் தொழில் செய்தார். என் அப்பா அம்மாவுடன் 10 ஆண்டுகளுக்கு முன் ரியல் எஸ்டேட் தொழில் செய்தார். என் அப்பா அம்மாவுடன்

எதிரி செய்த ரியல் எஸ்டேட் வியாபாரம் தொடர்பாக என் அப்பா அம்மாவை நீதிமன்றத்தில் விசாரித்தால் அது குறித்த விபரங்கள் தெரியவரும் என்றால் ஆம். எதிரியின் குடும்ப விபரங்கள், நிலங்கள் விபரங்கள் எனக்கு தெரியாது என்றாலும் நான் எதிரிக்கு பணம் கொடுத்தாக சொல்வது ஏற்புடையதாக அல்ல என்றால் சரியல்ல. பொதுவாக கடன் கொடுப்பவர்கள் கடனிற்கு ஆதரவாக ஆவணம் எழுதி வாங்குவார்கள் என்றால் ஆம். நான் சொன்னதுபோல் எதிரிக்கு கடன் கொடுத்திருந்தால் ஆவணம் ஏதும் எழுதி வாங்கியிருப்பேன் என்றாலும் நான் சொல்வதுபோல் கடன் கொடுக்கததால் அவ்வாறு ஆவணம் ஏதும் எழுதி வாங்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் புகார் மற்றும் நிருபண வாக்குமுலத்தில் 10.12.2024 அன்று எதிரியிடம் பணம் கேட்டதாக சொல்லியுள்ளது எவ்வாறு கேட்டேன் என்றால் ஒரு தரகர் மூலமாக தொடர்பு கொண்டு எதிரியிடம் கேட்டேன். அந்த தரகர் பெயர் அபிமன்னன்.

பணம் கொடுத்ததாக சொல்லும்போது அபிமன்னன் இல்லை. அபிமன்னன் எதிரி என் பெற்றோரிடம் வியாபாரம் செய்தபோதே தரகு வேலை பார்த்தாரா என்றால் இல்லை. சமீபமாக 3,4 ஆண்டுகளாக தரகு வேலை பார்த்தார். அபிமன்னன் எதிரிக்கும் என் அப்பாவிற்கும் இடையே நில வியாபாரத்தில் தரகு வேலை பார்த்தார் என்றால் சரி. அபிமன்னனை அழைத்து விசாரித்தால் இந்த வழக்கு கொடுக்கல் வாங்கல் குறித்த விபரங்கள் தெரியவரும் என்றால் ஆம். 10.12.2024 அன்று நான் நேரடியாக எதிரியிடம் பணத்தை கேட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கடன் கொடுத்ததாக சொல்லும் தேதி 14.11.2024. தரகர் மூலமாகவும் என் அப்பா மூலமாகவும் எதிரியிடம் இடைப்பட்ட நாட்களில் கேட்டோம். எதிரி நிறைய இடங்கள் வாங்க விற்க செய்து கொண்டிருக்கிறார் என்றாலும் அவர் பெயரில் இடங்கள் உள்ளது என்றாலும் சரி. நான் கடன் கொடுத்ததாக சொல்வதற்கு சொத்து ஜாமீன் எழுதி வாங்கவில்லை என்றால் நட்பின் அடிப்படையில் ஒன்று அல்லது ஒன்றரை மாதத்தில் திருப்பி தருவதாக சொன்னதால் எழுதி வாங்கவில்லை. நான் வழக்கில் சொல்லியுள்ளதுபோல் வேறு கடன்களை நானோ என் பெற்றோரோ எதிரிக்கு இதற்கு முன் வழங்கவில்லை. எதிரி என் தாயார் பெயருக்கு எழுதிக் கொடுத்த இடங்களை விற்பனை செய்துவிட்டேனா என்றால் கொஞ்சம் இடங்கள் மட்டும் உள்ளது. வழக்கு காசோலை தொகையை எதிரி செலுத்த கடமைபட்டவர் இல்லை என்றாலும் நான் எதிரிக்கு ரொக்கமாக தொகையை கொடுத்தாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. என் வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும் எதிரி விடுவிக்கப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை விரைவு நடுவர்,
திருவில்லிபுத்தூர்.